III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
MCOP.30/2019

Deposition of witness for the Respondent/RW1
solemnly by Tmt.K.Shanthi, Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 07-08-2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : Yugandhar | Village | : |
| Father's / Husband's Name | : Late.A.Krishna Reddy | Calling | : |
| Age | : | Taluk | : |

குறுக்கு விசாரணை

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

சாட்சி சொல்லுவதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. நான் டிப்ளோமா மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்திருக்கின்றேன். வாகனத்தின் உரிமையாளர் அழைத்து வந்ததன் பேரில் தான் நான் இன்று சாட்சியம் அளிக்க முன்னிலையாகி இருக்கின்றேன். நான் தாக்கல் செய்திருக்கின்ற பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்னுடைய உரிமையாளர் சொன்னதன் பேரில் அதிலுள்ள விவரங்கள் தயார்செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நடந்ததை நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. வாகன உரிமையாளர் எனது குடும்ப நண்பர். அன்றைய தினம் நான் ஒரு function க்காக வண்டி ஓட்டினேன். நான் ஓட்டுநராக பணிபுரியவில்லை. விபத்து நடந்தது புறவழிச்சாலை. விபத்து நடந்தது பிரதானசாலை. பார்க்கிங் ஏரியாவில் விபத்து நடைபெறவில்லை. நான் என்னுடைய வாகனத்தை நிறுத்தக்கூடாத இடத்தில் நிறுத்தியதால் தான் விபத்து சம்பவம் நடைபெற்றது என்றால் சரியல்ல. வாகனத்தின் பின்புறம் சத்தம் வந்தது. நான் இடது ஓரமாக வாகனத்தை நிறுத்தி போய் பார்த்தபொழுது பஞ்சர் ஆகியிருந்தது. அதனால் தான் நிறுத்தினேன். அடிபட்ட நபரை நான் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை. அவருக்கு என்ன காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில எந்த முகாந்திரமும் இல்லாமல் சொற்ப காயங்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்பவம் தொடர்பாக குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலையாகி நான் சாட்சியம் அளிக்கவில்லை. நான் இவ்வழக்கு தொடர்பாக அபராதம் எதுவும் செலுத்தவில்லை.

என்னிடம் காட்டப்படும் ம.த.சா.ஆ.13 ஆவணத்தின் படி இவ்வழக்கின் குற்ற இறுதி அறிக்கை எனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இதே விபத்து தொடர்பாக சென்னை சொற்ப வழக்குகள் நீதிமன்றத்தில் இழப்பீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளதாக சொல்லியிருக்கிறேன். இந்த விவரம் வாகன ஓனர் சொல்லி எனக்கு தெரியும். அந்த நீதிமன்றத்திலிருந்து எனக்கு சம்மன் எதுவும் வரவில்லை. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்துக்கு முழுக்க நான் தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. நானும் 2 வது எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து சமயம் வாகனம் இயக்கத்தில் இல்லை. நின்று கொண்டிருந்தது. நின்று கொண்டிருந்த வாகனத்தின் மீது தான் இருசக்கர வாகனம் மோதியது. என்னுடைய வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தினேன். மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் என்னுடைய வாகனத்திற்கு எந்த சேதாரமும் இல்லை என்று வந்திருக்கிறது என்று சொன்னால் சரிதான். இந்த விபத்தை மனுதாரர் தான் தானாகவே ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரிதான். 2 வது எதிர்மனுதாரரை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.